முருகப்பெருமான் துணை

**மகான் தாயுமானசுவாமிகள் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.02.2024**, செவ்வாய்கிழமை

1. கருணை வடிவான ஞானகுரு
கந்தப் பெருமான் அவதாரமாக
பேருலகம் காக்க எடுத்திருக்க
பேதமிலா அரங்க ஞானியின்
2. ஞானியின் பெருமை கூறி
நாட்டிடுவேன் துல்லிய ஆசி
இனிமைபட சோபகிருது சால்திங்கள்
இனிதே மூவை திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 15 ம் நாள், 27.02.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் தாயுமான சுவாமிகளும்
வழங்குவேன் உலகநலம்பெற
பாரதம் முழுக்க மாற்றம்
பகருவேன் ஆறுமுகன் நடத்திட
4. நடத்திட கலியினில் மாற்றம்
ஞானதேசிகனை கொண்டு
தடையற சன்மார்க்க வழியாக
தண்டாயுதனார் வழிபாட்டை செய்து
5. செய்துமே தமிழகம் தொட்டு
செகமெங்கும் சீர்திருத்தம்
மெய்ஞான உபதேசமாக
மேலவர்கள் ஆசிபட இறங்கி
6. இறங்கி மக்களை மீட்கும்
ஏகாந்த பலமாக அருள
வரங்கள்பெற வல்லமையும் பெற
வணங்கி மக்கள் அரங்க ஞானி
7. ஞானிவாழும் பிரணவக் குடிலுக்கு
நம்பிக்கை வைத்து வரவேணும்
ஞானிகள் மேலான பூசைதனை
நாள்தோறும் செய்து வருக

8. வருகவே கலியுக மக்களுக்கு
வாழும் காலமே சக்தி
முருகப் பெருமான் ஞானமாக
முழுமைதரும் வண்ணம் கிட்டி

9. கிட்டியே அரங்கமகான் வழி
குறைவிலா ஞானிகள் ஆகி
இட்டம்போல் ஜீவதயவுபட
எவ்வுயிரையும் தம்முயிராய் பாவித்து

10. பாவித்து கருணை பெருக்கி
பாவவினை அகற்றும் தருமம்
அவனியில் வெகுவாகச் செய்து
ஆற்றல்பட அரங்கன் அவதார

11. அவதார நோக்கம் வெற்றிகாண
அப்பனே உலகமாற்றம் புரிவர்
அவனியோர் ஞான ஆட்சிபடைப்பர்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—